கோயில் கும்பாபிஷேகம்

▶ திருப்பூர் பல்லடம் அருகேயுள்ள காமநாயக்கன்பாளையம் ஆதிகேசவ பெருமாள் கோயில் கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஸ்ரீதேவி பூதேவியுடன் ஆதிகேசவப் பெருமாள் மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்புரிந்தார்.

தேர்தல்களில் ஊழல் நடந்தால் ஜனநாயகத்துக்கு பெரும் ஆபத்து

லோக் ஆயுக்தா உறுப்பினர் ராமராஜ் பேச்சு

▶ உடுமலையில் நடந்த கருத்தரங்கில் தமிழ்நாடு லோக் ஆயுக்தா உறுப்பினர் ராமராஜ் பேசினார்.

உடுமலை, நவ. 28: லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா குறித்த கருத்தரங்கு உடுமலையில் நேற்று நடைபெற்றது. வழக்கறிஞர்கள் சங்க தலைவர் முருகானந்தம் தலைமை தாங்கினார். கருத்தரங்கில் தமிழ்நாடு லோக் ஆயுக்தா உறுப்பினர் ராமராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது:

வாக்காளர்கள் மற்றும் தேர்தல்கள் ஜனநாயகத்தின் அடித்தளங்கள் ஆகும். வாக்காளர் மற்றும் தேர்தல்கள் ஆகியவற்றை குறித்த கல்வியே வாக்காளரியல் கல்வியாகும்.

இவைகளில் ஊழல் ஏற்படும்போது ஜனநாயகத்துக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்படும்.

வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு இல்லாதது, ஊழல் மற்றும் சர்வாதிகாரம் ஆகியன ஜனநாயகத்தின் எதிரிகள் ஆகும். வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வாக்காளரியல் கல்வியை அனைவருக்கும் கொண்டு செல்வது அவசியமானதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக வாக்காளர்கள் என்பது வாக்காளரியலின் மையக் கருத்தாகும். வாக்காளரியல் கோட்பாடுகளை பரப்புவதே இதன் வேலையாகும். வாக்காளர் விழிப்புணர்வு ஊழலை ஒழிக்க அவசியமான ஒன்றாகும். நல்லாட்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கு ஊழல் மிகப்பெரிய எதிரியாகும். இவ்வாறு ராமராஜ் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் நீதிபதிகள், உடுமலை பார் அசோசியேசன் தலைவர் முருகானந்தம் மற்றும் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக உடுமலை வழக்கறிஞர்கள் சங்க செயலாளர் சிவகுமார் வரவேற்றார்.

வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை விரைவாக வழங்க வேண்டும்

கலெக்டர் வேண்டுகோள்

திருப்பூர், நவ. 28: திருப்பூர் மாவட்ட கலெக்டர் மனிஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி சிறப்புத் தீவிர திருத்தம் 2026 திருப்பூர் மாவட்டத்தில் கடந்த 4ம் தேதி தொடங்கி அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் கணக்கீட்டு படிவம் வழங்கப்பட்டு வாக்காளர்களிடமிருந்து இந்த கணக்கீட்டு படிவத்தை திரும்பப்பெறும் பணிகள் நடைபெற்று வருகிறது. வாக்காளர்களுக்கு எந்த ஒரு சிரமமும் இல்லாமல் சுலபமாக இந்த கணக்கீட்டு படிவத்தை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்க ஏதுவாக உங்கள் பகுதியிலேயே நேரடியாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கணக்கீட்டு படிவத்தை திரும்பப் பெற்றுக் கொள்வார்கள். வாக்காளர் பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் வருகிற 4ம் தேதி ஆகும். இறுதி நாள் வரை காத்திருக்காமால் ஓரிரு தினங்களுக்கு பூர்த்தி செய்யப்பட்ட கணக்கீட்டு படிவங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அனைத்து வாக்காளர்களும் சிறப்புத் தீவிர திருத்தம் 2026 பணிகளை நல்ல முறையில் பயன்படுத்திகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்களுடைய முழு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

அணைகளின் நீர்மட்டம்

அணை	மொத்த கொள்ளளவு	நீர்மட்டம் அடி	நீர் வரத்து கன அடி	வெளியேற்றம் கனஅடி
சோலையார்	160 அடி	141.93	409.49	459.76
பரம்பிக்குளம்	72 அடி	70.57	1180	890
ஆழியார்	120 அடி	115.85	785	379
திருமூர்த்தி	60 அடி	55.36	484	192
அமராவதி	90 அடி	74.77	672	25

காங்கயம் கொப்பரை மார்க்கெட்

கொப்பரை சாதா (கிலோ)	ரூ.193
கொப்பரை ஸ்பெசல்	ரூ.196
தேங்காய் பவுடர்	ரூ.230
தேங்காய் எண்ணெய் (15 கிலோ டின்)	ரூ.4650
தேங்காய் (டன்)	ரூ.62000
கருப்பு தேங்காய்	ரூ.67000
தேங்காய் தொட்டி	ரூ.28000

உடுமலையில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள்

அரசு மருத்துவமனையில் மாற்றுத்திறனாளிகளுக்கு வீல்சேர்

▶ உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி, உடுமலை அரசு மருத்துவமனையில் மாற்று திறனாளிகளுக்கு வீல்சேர் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

உடுமலை, நவ.28: உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா உடுமலை நகர தி.மு.க இளைஞரணி சார்பாக, நகர இளைஞரணி அமைப்பாளர் அர்ஜுனன் ஏற்பாட்டில், நகர திமுக செயலாளர் வேலுச்சாமி தலைமையில் நடைபெற்றது. தலைமை பொதுக்குழு உறுப்பினர் குமார், நகர மன்ற தலைவர் மத்தீன் முன்னிலையில் காலையில் உடுமலை மதியம் பஸ் நிலையத்தில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. சிறுபான்மை அமைப்பு சார்பாக காந்திநகர் முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கப்பட்டது.

அரசு மருத்துவமனையில் ரத்த தானம் வழங்கி மாற்றுத்திறனாளிகளுக்கு வீல்சேர், பிரசவ பெண்களுக்கு ரொட்டி, பழங்கள் வழங்கப்பட்டன. மத்திய பஸ் நிலையத்தில் பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. நெசவாளர் அணி சார்பில் காந்தி உண்டு உறைவிட பள்ளியில் மாணவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. கணக்கம்பாளையம் ஆரம்ப பள்ளியில் குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் நகர மன்ற துணை தலைவர் கலைராஜன், நகர நிர்வாகிகள் பழனிச்சாமி, வக்கீல் செந்தில்குமார், மாணவரணி விக்ரம், சிறுபான்மை அணி ஷாஜகான், ஹுமாயுன், அபுதாஹிர்பாஷா, இளைஞர்களின் நிர்வாகிகள் நரேஷ்குமார், செல்வகுமார், லோகேஷ், அஜித்குமார், பாலசுப்பிரமணியம், விஜய், நகர மன்ற உறுப்பினர்கள் ராஜசேகர், விஜயலட்சுமி, ஜெயலட்சுமி, கண்ணன், லோகுபாண்டி, ரீகன், மற்றும் திமுக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

குடும்பநல அறுவை சிகிச்சை விழிப்புணர்வு ரதம்

நவீன வாசக்டமிக்கு ரூ.3100 வழங்கப்படும்

▶ குடும்ப நல செயலகம் சார்பில் ஆண்களுக்கான குடும்ப நல அறுவை சிகிச்சை குறித்த விழிப்புணர்வு கையேடுகளை திருப்பூர் மாவட்ட கலெக்டர் மனிஷ் நேற்று பொதுமக்களுக்கு வழங்கினார்.

திருப்பூர், நவ. 28: திருப்பூர் மாவட்ட குடும்பநல செயலகம் சார்பாக ஆண்களுக்கான குடும்பநல அறுவை சிகிச்சை வார விழாவினை முன்னிட்டு விழிப்புணர்வு ரதத்தினை, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் மனிஷ் கொடியசைத்து தொடங்கி வைத்து பேசியதாவது:

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறையின் மாவட்ட குடும்பநலச் செயலகம் சார்பாக ஆண்களுக்கான குடும்பநல அறுவை சிகிச்சை நவீன வாசக்டமி இருவார விழா கடந்த 21ம் தேதி தொடங்கியது. இது வருகிற 4ம் தேதி வரை நடக்கிறது. அந்த வகையில் விழிப்புணர்வு ரதம் தொடங்கி வைக்கப்பட்டது.

குடும்பத்தின் ஆரோக்கியம் மற்றும் மகிழ்ச்சிக்கான கனவு குடும்ப நலத்தில் ஆண்கள் பங்கேற்றால் மட்டுமே நனவு என்ற விழிப்புணர்வு ரதம் பேருந்து நிலையங்கள், ரயில் நிலையம் மற்றும் மக்கள் கூடும் இடங்களில் நகர்வலம் வரவுள்ளது.

மேலும், ஆண்களுக்கான குடும்பநல அறுவை சிகிச்சை நவீன வாசக்டமி விளக்க கையேடு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. இருவார விழாவினை முன்னிட்டு ஆண்களுக்கான குடும்பநல அறுவை சிகிச்சை முகாம்கள் தொடர்ந்து நடைபெற உள்ளன.

குடும்பநல அறுவை சிகிச்சை ஏற்கும் ஆண்களுக்கு அரசு ஊக்கத் தொகையாக ரூ.1100, அன்பளிப்பு தொகை ரூ.1000 மற்றும் தனியார் ரோட்டரி கிளப் வழங்கும் அன்பளிப்பு தொகை ரூ.1000 என மொத்தம் ரூ.3100 வழங்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் துணை இயக்குநர் (குடும்பநலம்) கௌரி, முதல்வர் (திருப்பூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை) மனோன்மணி, இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மீரா, மாவட்ட குடும்ப நலச்செயலக மாவட்ட விரிவாக்க கல்வியாளர்கள் ராணி, சார்லஸ் ராஜன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மக்களுக்கு மதிய உணவு

▶ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் மாநகர இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர். ராஜ் தலைமையில் ஏழை. எளிய மக்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில், மாநகர துணை அமைப்பாளர்கள் தியாகு, விக்னேஷ், தமிழரசு, அரவிந்த், பகுதி அமைப்பாளர்கள் மதிவாணன், அருண் பிரதீப், சதீஷ் குமார், சபரீஷ், அபிஷேக் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

எஸ்ஐஆர் பணியை கலெக்டர் ஆய்வு

▶ காங்கயம் அடுத்த படியூர் ஊராட்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை கலெக்டர் மனிஷ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

வேல் வழிபாடு ரதத்துக்கு வரவேற்பு

பல்லடம், நவ. 28: உலக அமைதி வேண்டியும், இந்தியா வல்லரசாக மாற வேண்டும் என்றும், இந்து முன்னணி சார்பில் வேல் வழிபாடு ரதம் கடந்த அக்டோபர் மாதம் திருப்பூர் கொங்கணகிரி முருகன் கோயிலில் இருந்து தொடங்கியது. இந்த ரதத்தில், வேல் மற்றும் முருகப் பெருமான் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்தார். இந்த ரதம், திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளுக்கு சென்று விட்டு பல்லடம் வந்தது. இந்த ரதத்துக்கு திருப்பூர் மேற்கு மாவட்ட இந்து முன்னணி செயலாளர் சர்வேஸ்வரன் தலைமையில் நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர். இந்த நிகழ்ச்சியில் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் செந்தில், மாவட்ட செயலாளர் ரஞ்சித் மற்றும் இந்து முன்னணி நிர்வாகிகள் பலர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

மின் வாரிய தொழிற்சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

▶ பல்லடம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பல்லடம், நவ.28: மின்சார சட்ட திருத்த மசோதாவை எதிர்த்து மின் வாரிய தொழிற்சங்கங்கள் சார்பில் பல்லடம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேசன், சி.ஐ.டி.யு. மின் தொழிலாளர் சங்கம், மின்சார தொழிலாளர் சம்மேளனம், ஐக்கிய சங்கம், என்ஜினீயர் அஸோஸியேசன், என்ஜினீயர் சங்கம் ஆகிய மின் வாரிய தொழிற்சங்கங்கள் சார்பில் மின்சார சட்ட திருந்த மசோதா மற்றும் நான்கு சட்ட தொகுப்புகள் அமலாக்கம் செய்வதை எதிர்த்தும், உத்தரபிரதேச மாநில மின் வாரிய ஊழியர்கள் போராட்டத்திற்கு ஆதரவை தெரிவித்தும் பல்லடம் மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மின் வாரிய தொழிற்சங்க நிர்வாகிகள், சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: கேபிஎஸ் ஆர்கேட், எண்.6/1044, 2 ஆவது தளம், கோவை பிரதான சாலை, கரூர்-639002.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவாதீனம் செய்துள்ளார்.

கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 29.12.2025 நாளில் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விலங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1.	கடன் எண். HL00694100000005045768 A அப்துல் ஹுசைன் (கடன்தாரர்), பர்வீன் A (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 08/08/2025 மொத்த நிலுவைத் தொகை: 08.08.2025 தேதியன்று ரூ.20,40,038/- (ரூபாய் இருபது லட்சத்து நாற்பதாயிரத்து முப்பத்தெட்டு மட்டும்) அதனுடன் கூட பணம் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான ஆண்டொன்றுக்கு 14.6% வட்டி.	கையக	திருப்பூர் பதிவு மாவட்டம், வெள்ளக்கோவில் சார் பதிவு மாவட்டம், காங்கேயம் வட்டம், திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் கிராமம், பழைய S.No.555, புதிய S.No.555/1, தற்போதைய S.No.555/1a1a, பட்டா எண்.11892 இல் உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்.17 ½ அடி, தெற்கு பக்கம்.17.12 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம்.62.2 அடி, மேற்கு பக்கம்.62.3 அடி, மொத்தம் 101.83 ச.மீட்டருக்குச் சமமான1096 ச.அடி நிலத்துடன் கூடிய அனைத்து பயன்பாட்டு உரிமைகளும் நடைபாதை உரிமைகளும் உள்ள சொத்தின் எல்லைகள்: **கிழக்கில்:** ராஜாமணிக்குக் சொந்தமான சொத்து, **மேற்கில்:** பாப்பாத்தியின் மீதமுள்ள நிலம், **தெற்கில்:** 20 அடி அகல கிழக்கு மேற்கு நடைபாதை, **வடக்கில்:** வேலுசாமி கவுண்டர் மற்றும் பிறரின் சொத்து.	Rs. 1894616/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து தொன்னூற்று நான்காயிரத்து அறுநூற்று பதினாறு மட்டும்)	Rs. 189461.60/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தொன் பதாயிரத்து நானூற்று அறுபத்து ஒன்று மற்றும் பைசா அறுபது மட்டும்)	27-12-2025 Before 5 PM	10,000/-	23-12-2025 (11AM – 4PM)	29-12-2025 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, **தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222** மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக 'க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரசீட்ஸ் கணக்கில்', வங்கி: ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code- ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பஞ்ச்சில் டெக் பார்க், கணபதி செளக் அருகில், 43/44, விமன் நகர், -411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 27.12.2025 தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை கேபிஎஸ் ஆர்கேட், எண்.6/1044, 2 ஆவது தளம், கோவை பிரதான சாலை, கரூர்-639002, மேலும் கைபேசி எண். +91 9567626050, மின்னஞ்சல் முகவரி rahul.r1@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாள்கள் அறிவிப்பு என்று கருதத் தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 28.11.2025, இடம்: திருப்பூர்

ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...

தினகரன்

8904156777

9.30 AM - 6.00 PM